### வனத்துறை சார்பில் பசுமை இயக்கத்தின் ஆண்டு விழா!

# திருப்பெரும்புதூர் - தண்டலத்தில் 1000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி!

### அமைச்சர்கள் சிவ.வீ.மெய்யநாதன் - மா.மதிவேந்தன் துவக்கி வைத்தனர்!

காஞ்சிபுரம், செப். 25-

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டம், தண்டலம் தனியார் பொறியியல் கல்லூரியில் தமிழ்நாடு வனத்துறை சார்பில் நேற்று (24.09.2024) நடைபெற்ற பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் இரண்டாம் ஆண்டு விழாவில் சுற்றுச்சூழல், மாசுக்கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன் குத்து விளக்கேற்றி, 1000 மரக்கன்றுகள் நட்டு நிகழ்ச்சி யினை துவக்கி வைத்தார்கள்.

பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் இரண்டாம் ஆண்டு விழாவில் சுற்றுச்சூழல், மாசுக்கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலத்துறை அமைச்சர் தமிழகத்தின் பாரம்பரிய மரங்கள் குறித்த நூல் வெளியிட்டு, தெரிவித்ததாவது:

பசுமை தமிழ்நாடு இயக்கம் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டின் பசுமை பரப்பை தற்போதுள்ள 23.7 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாக உயர்த்தும் நோக்கில் கொண்டு வரப்பட்டது. பசுமை தமிழ்நாடு இயக்கம் இரண்டாம் ஆண்டு விழா நாம் எல்லோரும் சேர்ந்து இக்கல்லூரியில் கொண்டாடுவது நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பான பசுமை தமிழ்நாடு இயக்கம் ஒரு மக்கள் இயக்கம் என்பதற்கான சான்று ஆகும். தற்போதுள்ள காலநிலை மாற்றம் திடீர் திடீர் மாற்றங்களுடன் அதிகப்படியான வெப்பம் அதிகப்படியான மழை, வெள்ளம், நிலச்சரிவு, புயல் போன்ற பேரழிவுடன் கூடிய இயற்கைச்சீற்றங்கள் ஏற்படக்கூடிய சூழல் உள்ளதால் மரம் நடும் பணி ஒரு அறப்பணி என்பதற்கேற்பவும் மேற்கண்ட காலநிலை மாற்றத்தினை மட்டுப்படுத்தும் மிகப்பெரும் உன்னதமான பணியை பசுமை தமிழ்நாடு இயக்கம் மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியதாகும். நமது முதலமைச்சர் நமது மாநிலத்தின் மக்களையும் மண்ணையும் காக்கும் விதமாக பல்வேறு தொலைநோக்கு திட்டங்களில் பசுமை தமிழ்நாடு இயக்கம் திட்டம் ஒரு மைல்கல் திட்டம் ஆகும். மரங்கள் வளர்ப்பது என்பது அதுவும் வேளாண்மை நிலங்களில் உழவு தொழிலுக்கு குந்தகம் இல்லாமல் உணவுக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் மரக்கன்றுகள் வளர்க்கப்படுவது போற்றத்தக்கது ஆகும். மரம் வளர்ப்பதால் பல்லுயிர்களும் பாதுகாக்கப்படுகிறது. எனவே, மரங்கள் பல்லுயிர்களின் பாதுகாவலன் என்றே கூறலாம். ஆகையால் தற்போது தொழிற்சாலைகளின் அபரிமிதமான வளர்ச்சியின் காரணமாக ஏற்படும் காலநிலை மாற்றத்தினை ஈடுசெய்யும் விதமாக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறையின் மூலம் பசுமை தமிழ்நாடு இயக்கத்திற்கு மரம் நடும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு தேவையான நிதி ஆதாரம் 135.12 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, கடந்த இரு ஆண்டுகளில் சுமார் 7 கோடி மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளது. மரம் நடும் பணிகளில்

அனைத்துத் துறைகளையும், பொதுமக்கள், தொண்டு நிறுவனங்கள், பள்ளி கல்லூரி மாணவ / மாணவியரை பங்கேற்க செய்வது உள்ளபடியே ஒரு பாராட்டுக்குரியதாகும். எனவே பசுமை தமிழ்நாடு இயக்கம் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி வெற்றி நடைபோடுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தற்போது பெருகி வரும் நகர்மயமாதல், வாகனப்பெருக்கம் ஆகியவற்றினால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. எனவே தான் மரம் வளர்ப்பதன் மூலம் பசுமையாக்கல் பணி இன்றியமையாததாக ஆக்கப்படுகிறது. மேலும் கார்பன் படிவு, தேக்கம், நேரடியாக உயிரினங்களையும், மக்களை பாதிப்படையச்செய்கிறது. இதற்காகத்தான் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது.

அவ்வாறாக கார்பன் வரவு திட்டம் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் மத்திய அரசு சுற்றுப்புறம் வனம் அமைச்சகத்தின் நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் 100 பகுதிகளில் சுமார் 2000 Ha பரப்புக்கு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மரம் வளர்ப்பு மூலம் கார்பன் வரவு என்ற மறைமுக நிதி வரவு ஈட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் 2023-2024ம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் வாழ்விட மேம்பாட்டுக்காக உயிர் அரண் அமைத்தல் திட்டத்தின் படி சதுப்பு நிலங்கள் தேர்வு செய்து சதுப்பு நிலதாவரங்களான அவிசீனியா, ரைசோபோரா போன்ற தாவரங்கள் நடவு செய்து சுமார் 360 Ha பரப்பில் புதிய இடங்களில் சதுப்பு நிலக்காடுகள் உருவாக்கப்பட்டும் மேலும் 700 Ha பரப்பில் ஏற்கனவே நலிவுற்ற நிலையில் இருந்ததை சதுப்புநில காடுகள் மீட்டு உருவாக்கம் செய்தும் இத்துடன் இல்லாமல் 160,000 எண்ணிக்கை நம் மாநிலத்தின் மரமான பனை மரங்கள் நடவு செய்தும் மேலும் 180 Ha பரப்பில் சவுக்கு மரத்தோட்டங்கள் கடலோர பகுதிகளில் உற்பத்தி செய்தும் புயல் பாதிப்பில் இருந்து மக்களை பாதுகாப்பு செய்யும் நடவடிக்கைகளும் சுற்றுப்புறம் மற்றும் காலநிலை மாற்றத் துறை நிதி உதவியுடன் பசுமை தமிழ்நாடு இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் உலக வங்கி உதவியுடன் நெய்தல் புரட்சி இயக்கம் (Tamil Nadu Coastal Mission) என்ற புதிய இயக்கம் தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் 1076 கி.மீ. நீளம் கொண்ட கடலோர பகுதிகளை மேம்படுத்தும் விதமாக உலக வங்கி நிதி உதவி கோரி பிரேரணை ரூ.38.36 கோடிக்கு நமது முதலமைச்சர் அவர்களால் அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆகையால் தமிழ்நாடு வனத்துறையுடன் சுற்றுப்புறம், காலநிலை மாற்றம் துறையும் இணைந்து இப்புவிப் பரப்பினை பசுமையாக்கும் பணிகள் காலநிலை மட்டுப்படுத்தும் பணிகள் கார்பன் வரவு போன்ற திட்டங்களும் செவ்வனே செயல்படுத்தப்பட்டு நமது முதலமைச்சரின் இலக்கினை நோக்கி வெற்றி நடைபோட்டு வருகிறது எனவும் சுற்றுச்சூழல், மாசுக்கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலத்துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

விழாவில் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் சிறப்பு அஞ்சல் வில்லை வெளியிட்டு, தமிழ்நாடு வனத்துறை e-நர்சரி இணையதளத்தை துவக்கி வைத்தும் வனத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

பசுமை தமிழ்நாடு இயக்கம் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொலைநோக்குப் பார்வையுடன் தமிழ்நாட்டின் பசுமை பரப்பை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் தற்போதுள்ள பசுமை பரப்பை தேசிய வனக் கொள்கையின் படி 33 சதவீதம் கொண்டு வர வேண்டும் என்ற உன்னத இலட்சியத்துடன் கடந்த செப்டம்பர் 24ம் நாள் 2022ம் ஆண்டு நமது முதலமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது. மேலும் பசுமை தமிழ்நாடு இயக்கம் ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுக்க வேண்டும் என்ற முதலமைச்சரின் வேண்டுகோள் படி இதுவரை பசுமை தமிழ்நாடு இயக்கத்தில் 7307 எண்ணிக்கை தன்னார்வலர்கள், 32514 எண்ணிக்கை பொதுமக்கள், 3023 எண்ணிக்கை அரசு துறை அலுவலர்கள், 208 எண்ணிக்கை அறக்கட்டளைகள், 200 எண்ணிக்கை அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் 433 இதரநிறுவனத்தினர் இணைய வழியாக இணைந்து பசுமை தமிழ்நாடு இயக்கம் ஒரு மாபெரும் மக்கள் இயக்கம் என்பதை நிரூபித்து வருகிறார்கள். இதற்கு சான்றாக இவ்விழாவினை முன்னெடுத்து யங் இந்தியா தன்னார்வல இளைஞர் இயக்கம் பசுமை தமிழ்நாடு இயக்கத்தில் கைகோர்த்து அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வது எங்களுக்கு பெருமைபட வைத்தது.

இவ்வியக்கத்தின் வனத்துறை மட்டுமல்லாது இதர துறைகளையும் பங்கு பெற செய்தும், பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனம், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர், தொழிற்சாலைகள் என அனைவரையும் உள்ளடக்கி மரக்கன்றுகள் நடும் பணியை ஊக்குவித்து ஒருங்கிணைக்கும் பணியை பசுமை தமிழ்நாடு இயக்கம் மேற்கொண்டு வருகிறது. நமது மாநிலத்தில் மரக்கன்று நடும் பணியான பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் திட்டத்தை நமது தமிழ்நாடு முதலமைச்சரின் முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக முன்னுரிமை வழங்கப்பட்டும் வருகிறது.

மரக்கன்றுகள் நடும் பணியானது காப்புக்காடுகள் மட்டுமல்லாது காப்புவனங்களுக்கு வெளியேயும் அதாவது விவசாய நிலங்கள், சமுதாய நிலங்கள், இதர துறை சார்ந்த இடங்கள், சாலையோரம், நீர்நிலைகரைகள், பள்ளி, கல்லூரி வளாகங்கள் மற்றும் தொழிற்சாலை இடங்கள் என அனைத்து இடங்களிலும் மரக்கன்று நடவு செய்யும் பணிகள் செவ்வனே இரண்டு ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி பசுமை தமிழ்நாடு இயக்கத்தில் வேளாண் துறை உள்ளிட்ட அனைத்து துறைகள் மற்றும் பொதுமக்கள், தன்னார்வலர்கள், விவசாயிகள் என அனைவராலும் இதுவரை சுமார் 7 கோடி மரக்கன்றுகள் நடவு செய்து சுமார் 1,25,000 Ha நிலப்பரப்பு பசுமையாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நடவு செய்யப்படும் மரக்கன்றுகள் இடம் குறித்து விபரம், எண்ணிக்கை, செடி இனம் ஆகியவை புவிக் குறியீடு (geo tagging) செய்யப்பட்டு பசுமை தமிழ்நாடு இயக்கம் (www.greentnmission.com) இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. பசுமை தமிழ்நாடு இயக்கம் பணிகளை கண்காணிப்பு செய்யும் வகையில் மாவட்டம்தோறும் மாவட்ட

ஆட்சித்தலைவர் தலைமையில் இதரத்துறை அலுவலர்களை உள்ளடக்கி மாவட்ட பசுமை குழுக்கள் அமைக்கப்பட்டு பெருமளவு மரக்கன்று நடும் பணிகள் ஊக்குவிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் என மொத்தம் 2000 நர்சரிகளில் அனைத்து தரப்பினராலும் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து பருவமழையை பயன்படுத்தி நடவு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி இதுவரை ஏழு கோடி மரக்கன்றுகள் அனைத்து இடங்களிலும் நடவு செய்யப்பட்டுள்ளது. பசுமை தமிழ்நாடு இயக்கம் இரண்டாம் ஆண்டு விழா கொண்டாடப்படும் இந்நாளில் அனைத்து மாவட்டங்களிலும் பசுமை தமிழ்நாடு நாள் இன்று பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் மாவட்டந்தோறும் 1000 மரக்கன்றுகள் நடவு செய்து விழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. ஆகையால் இன்று மாநிலத்தின் தலைமையகமான சென்னையில் பசுமை நிறைந்த இந்த தனியார் பொறியியல் கல்லூரியில் கல்லூரி மாணவ / மாணவியர் மத்தியில் இவ்விழா கொண்டாடப்படுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

எனவே நமது தமிழ்நாடு முதலமைச்சரின் கனவினை நிறைவேற்றிடும் வகையில் நாம் அனைவரும் கரம் கோர்த்து பசுமை தமிழ்நாடு இயக்கத்தினை ஒரு மாபெரும் ஒரு மக்கள் இயக்கமாக கொண்டு சேர்ப்போம் என கேட்டுக் கொள்கிறேன் வனத்துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மை செயலாளர் முனைவர். ப.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறைத் தலைவர் முனைவர். சுதான்ஷ்/ குப்தா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (ம) உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில ஈரநில ஆணையம் மற்றும் தலைமை இயக்குநர், பசுமை தமிழ்நாடு இயக்கம் (மு.கூ.பொ) தீபக் ஸ்ரீவஸ்தவா, இ.வ.ப., மாவட்ட வன அலுவலர் ரவி மீனா, இணை இயக்குநர் திருமதி தமிழ்மொழி அமுது, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துக் கொண்டனர்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் நேற்று (24.09.2024) சென்னை, இராமாபுரத்தில் உள்ள சிற்பக் கூடத்தில், விழுப்புரம் மாவட்டத்தில் அமையவுள்ள சமூக நீதி காவலர்களின் சிலைகள் மற்றும் ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் அமையவுள்ள உத்தமத் தியாகி ஈஸ்வரன் அவர்களின் திருவுருவச் சிலை ஆகியவற்றின் வடிவமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், ஆகியோர் உடனிருந்தனர்.

### உடல் உறுப்பு தானம் செய்த குடும்பத்தினர் கௌரவிக்கப்பட்டனர்!

# உடல் உறுப்பு தான விழிப்புணர்வு நிகழ்ச்சி!

### அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, செப். 25-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (23.09.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் உறுப்பு தான தினம் 2024 நிகழ்ச்சியில், உடல் உறுப்பு மாற்று விழிப்புணர்வு கையேடு மற்றும் "மறுபிறவி" என்ற உடல் உறுப்பு தான விழிப்புணர்வு குறுந்தகட்டினை வெளியிட்டு, உறுப்புக் கொடையாளர் குடும்பத்தினருக்கு சிறப்பு செய்து, உறுப்பு மாற்று சிகிச்சையில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பு செய்தார்கள்.

இதில் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

2008 செப்டம்பர் மாதம் தொடங்கி தமிழ்நாட்டில் உடலுறுப்பு தானம் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. 2008 ஆம் ஆண்டு ஹிதேந்திரன் என்பவர் இருசக்கர வாகன விபத்தில் காயமடைந்து மூளைச்சாவு அடைந்து உடலுறுப்பு தானம் செய்ய முன் வந்ததினைத் தொடர்ந்து அன்றைய முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களது மனித நேயத்தினை அழைத்து பாராட்டினார்கள். அதனைத்தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008 செப்டம்பர் திங்கள் 5ஆம் தேதி தமிழ்நாட்டில் மூளைச்சாவு அடைந்தவர்களிடமிருந்து உடலுறுப்பு தானமாக பெறுவதற்கு உறுப்பு மாற்று சிகிச்சை திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து தற்போது வரை 1998 உறுப்புக் கொடையாளர்கள் உருவாகியிருக்கிறார்கள். தற்போது வரை முக்கிய உடலுறுப்பு பயன்பாடு என்பது 7207 ஆக உள்ளது, இது வரை இந்த திட்டம் மூலம் தமிழ்நாட்டில் பயன்படுத்திய தொடங்கியதற்கு பிறகு இருதய மாற்று அறுவை சிகிச்சைக்கு கொடையாளர்களின் மூலம் பெறப்பட்ட இதயம் 892, நுரையீரல் 912, கல்லீரல் 1794, சிறுநீரகம் 3544, கணையம் 42, சிறுகுடல் 15, வயிறு 1, கைகள் 7 என 7207 முக்கிய உறுப்புகள் பயன்பாடு பெற்றிருக்கிறது. மொத்த திசுக்கள் பயன்பாடு என்பது 4204 என்கின்ற வகையில் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றபிறகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் பல்வேறு வகைகளில் இத்திட்டம் தொடர்பாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகிறார்கள். 07.05.2021 முதல் தற்போது வரை 585 பேர் உடலுறுப்பு தானம் செய்திருக்கிறார்கள். 2008 தொடங்கி தற்போது வரை 1998 பேர் உடலுறுப்பு தானம் செய்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் இதற்கான விழிப்புணர்வுகள் அதிகப்படுத்தப்பட்டு, உடலுறுப்பு கொடையாளர்களின் எண்ணிக்கை பெருகிவரும் சூழ்நிலையில் தொடர்ச்சியாக கடந்த 8 ஆண்டுகளாக தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது.

**உடல் உறுப்பு தானம் அரசு சார்பில் மரியாதை!**

தமிழ்நாடு முதலமைச்சர் உடலுறுப்பு கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்திடும் வகையில் கடந்த ஆண்டு இதே நாளில் முதலமைச்சர் புதிய அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டிருந்தார்கள். உடலுறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அந்தவகையில் 23.09.2023 முதல் தற்போது வரை 272 கொடையாளர்களுக்கு அரசு சார்பில் மரியாதை செய்யப்பட்டுள்ளது. இவர்கள் மூலமாக பெறப்பட்ட உறுப்புகளின் எண்ணிக்கை 1461 ஆகும். இந்த அறிவிப்பிற்கு பிறகு கடந்த ஓராண்டு மட்டும் 14300 பேர் உடலுறுப்பு தானம் செய்ய ஆன்லைன் வழியில் பதிவு செய்திருக்கிறார்கள். இந்த சிறப்பான அறிவிப்பினை அண்டை மாநிலங்களாக ஆந்திரா, ஒடிசா போன்ற மாநிலங்களில் இத்திட்டத்தை செயல்படுத்திட முடிவு செய்திருக்கிறார்கள். உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சையினை பொறுத்தவரை தமிழ்நாட்டில் இதயம், கல்லீரல், சிறுநீரகம், கணையம், தோல், எலும்பு மஜ்ஜை, கண் கருவிழிகள் என்று பல்வேறு வழிகளில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெற்று வருகிறது.

இந்தியாவில் வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாதவகையில் உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம் மூலம் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. அந்தவகையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு காப்பீட்டு திட்டம் மூலம் ரூ.22 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது, சிறுநீரகம் மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு ரூ.4 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. இதயம் மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு ரூ.18 இலட்சம் வரை காப்பீடு திட்டம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் தமிழ்நாடு உடலுறுப்பு தானத்திலும், உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்கும் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக இருந்து வருகிறது. என்றாலும் உடலுறுப்பு வேண்டி காத்திருப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அந்தவகையில் சிறுநீரகம் வேண்டி காத்திருப்பவர் 7106 பேர், கல்லீரல் வேண்டி காத்திருப்பவர் எண்ணிக்கை 416 பேர், இதயம் 83 பேர், நுரையீரல் வேண்டி காத்திருப்பவர் 54 பேர், இதயம் மற்றும் நுரையீரல் வேண்டி காத்திருப்பவர் 24 பேர், கணையம், கைகள், சிறுகுடல், வயிறு, சிறுநீரகம், இதயம் என 7797 பேர் உடலுறுப்பு வேண்டி காத்திருப்பவர்களாக உள்ளனர். இவர்களுக்கு விடியல் என்னும் இணையதளம் தொடங்கி அதன்மூலம் ஒவ்வொருவருக்கும் பதிவு செய்திருக்கும் காலத்தினை பொறுத்து, உடலுறுப்புகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

**எடப்பாடி பழனிச்சாமி குற்றச்சாட்டிற்கு பதில்**

மருந்து தட்டுப்பாடு என்பது கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னாள் சேலம் மாவட்டத்தில் உள்ள ஒரு அரசு மருத்துவமனையில் இல்லை என்று கூறினார், உடனடியாக அம்மருத்துவமனைக்கு ஆய்வு செய்து மருந்து தட்டுப்பாடு இல்லை என்பதை நிரூபித்தோம். நேற்று மற்றும் நேற்று முன்தினம் திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 32 மருத்துவ கட்டிடங்களை திறந்து வைத்துள்ளேன். நான்கு மருத்துவமனைகளில் கீரனூர், லால்குடி, ஸ்ரீரங்கம் போன்ற 4 மருத்துவமனைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு வந்திருக்கிறேன். உங்களது கடந்த 10 ஆண்டு ஆட்சிக்காலத்தில் திடீர் ஆய்வு என ஏதாவது செய்திருக்கிறீர்களா? மருந்துகளை பொறுத்தவரை பாம்புக்கடிக்கான மருந்து ASP நாய்க்கடிக்கான மருந்து ARV இந்த அரசு பொறுப்பேதற்கு முன்னாள் எந்த மருத்துவமனையில் இருந்தது என்றால் வட்டார அரசு மருத்துவமனைகளிலும், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் மட்டும்தான் இருந்தது. தற்போது 2286 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பாம்புக்கடி மருந்துகளும், நாய்க்கடி மருந்துகளும் கையிருப்பில் உள்ளது. கிராமப்புறங்களில் மட்டுமே பாம்புக்கடி, நாய்க்கடி அதிகமாக இருக்கும். நான் எடப்பாடி பழனிச்சாமி கேட்டுக் கொள்வது என்னவென்றால் தமிழ்நாட்டில் எந்த மருத்துவமனைகளிலாவது உங்களுக்கு தெரிந்த மருத்துவர்கள் இருந்தால் பாம்புக்கடிக்கும், நாய்க்கடிக்கும் ஆன மருந்துகள் உங்கள் ஆட்சியில் கையிருப்பு இருந்ததா என்பதை கேட்டுத் தெரிந்து கொண்டு பேசவும். கடந்த ஜீன் திங்கள் 27ஆம் தேதி மலுமிச்சம்பட்டியில் இதயம் காப்போம் என்கின்ற திட்டம் தொடங்கினோம். தமிழ்நாடு முழுவதிலும் உள்ள இதயம் பாதித்தவர்களுக்கு பெரிய மருத்துவமனைகளுக்கு சென்றால் தான் ஆஞ்சியோ போன்ற சிகிச்சைகள் செய்வார்கள். அவர்களுக்கு உடனடியாக உயிர் காக்கும் உன்னத மருந்து (Loading Doses) போன்ற சிகிச்சைகள் தொடங்கி தற்போது 11,000 பேர் இத்திட்டத்தில் பயன்பெற்று இருக்கிறார்கள். இந்த Loading Doses 8713 துணைசுகாதார நிலையங்களிலும், 2286 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஆக மொத்தம் 10,999 மருத்துவமனைகளிலும் உள்ளது. எடப்பாடி பழனிச்சாமி அவர்களை கேட்பது என்னவென்றால் உங்களது ஆட்சிக்காலத்தில் எந்தவொரு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணைசுகாதார நிலையங்களிலும் உயிர்காக்கும் உன்னத மருந்து (Loading Doses) இருந்துள்ளதா என்கின்ற விவரங்களினை கேட்டு சொல்லவும், அதன்பிறகு அவர் கேட்கும் எந்த கேள்விகளுக்கும் பதில் சொல்ல தயாராக இருக்கிறோம்.

**டெங்கு காய்ச்சல்**

டெங்கு என்பது பெரிய அளவில் கட்டுக்குள் உள்ளது. நான் ஏற்கெனவே சொன்னது போல் 2012, 2017 ஆண்டுகளில்தான் வரலாற்றிலேயே அதிக டெங்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. மேலும் 2012 இல் 66 பேர், 2017இல் 65 பேர் என இறப்புகள் ஏற்பட்டுள்ளது. தற்போது பருவமழைகள் தொடங்கப்பட உள்ளது, தற்போது வரை 5 இறப்புகள் ஏற்பட்டுள்ளது, இந்த 5 இறப்புகள் கூட மருத்துவமனைகளுக்கு வராமல் காலம் தாழ்த்தியது, நோய் எதிர்ப்பு சக்திகள் குறைவாக இருப்பது போன்ற காரணங்கள் தான், எனவே டெங்கு என்பது தற்போது வரை கட்டுக்குள் இருக்கிறது, அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் காரப்பாக்கம் கணபதி, அரவிந்த் ரமேஷ், அசன் மௌலானா, பிரபாகர் ராஜா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.இராஜமூர்த்தி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன், வடக்கு போக்குவரத்து காவல்துறை துணை ஆணையர் குமார், அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், மருத்துவப் பேராசிரியர்கள் மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசமைப்புச் சட்டத்திற்கு முரணான கருத்துகளைப் பேசி வரும்

# தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை பதவி நீக்கம் செய்ய வேண்டும்!

### காங்கிரஸ் கட்சி வலியுறுத்தல்!

புதுடெல்லி, செப்.25-

ஆளுநர் ஆர்.என். ரவி கூறி வரும் கருத்துக்கள் தொடர்ந்து சர்ச்சையை ஏற்படுத்தி வருகின்றன. இதற்கிடையே இந்திய அரசியலமைப்பில் பிரதானமான மதச்சார்பின்மை, ஐரோப்பாவில் இருந்து இறக்குமதியானது என்றும் இதனால் இந்தியாவிற்கு மதச்சார்பின்மை தேவையற்றது என ஆளுநர் ஆர்.என்.ரவி அண்மையில் பேசியிருந்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் ஆளுநரின் இந்த கருத்திற்கு காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், அரசமைப்புச் சட்டத்தின் பெயரால் பதவியேற்றுக்கொண்டு, தொடர்ந்து அரசமைப்புச் சட்டத்திற்கு முரணாக ஆளுநர் ஆர்.என்.ரவி கருத்து தெரிவிப்பது அரசமைப்புச் சட்டத்தை அவமதிக்கும் செயல் என அவர் சாடியுள்ளார்.

ஆளுநரின் இந்த நடவடிக்கை ஏற்றுக் கொள்ளமுடியாதது என்றும் இதனால் அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக செயல்படும் அவரை ஆளுநர் பதவியிலிருந்து ஒன்றிய அரசு நீக்கம் செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தி உள்ளார். பிரதமர் மோடி எதனைச் செய்ய விரும்புகிறாரோ அதனையே ஆளுநர் ஆர்.என்.ரவி பிரதிபலித்து வருவதாக ஜெய்ராம் ரமேஷ் சாடியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், தண்டலம் தனியார் பொறியியல் கல்லூரியில் நேற்று (24.09.2024) தமிழ்நாடு வனத்துறை சார்பில் நடைபெற்ற பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் இரண்டாம் ஆண்டு விழாவில் சுற்றுச்சூழல், மாசுக்கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன் ஆகியோர் 1000 மரக்கன்றுகள் நட்டு நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார்கள். உடன் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மை செயலாளர் முனைவர்.ப.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறைத் தலைவர் முனைவர்.சுதான்ஷ்/ குப்தா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (ம) உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில ஈரநில ஆணையம் மற்றும் தலைமை இயக்குநர், பசுமை தமிழ்நாடு இயக்கம் (மு.கூ.பொ) தீபக் ஸ்ரீவஸ்தவா, மாவட்ட வன அலுவலர் ரவி மீனா, இணை இயக்குநர் திருமதி தமிழ்மொழி அமுது ஆகியோர் உள்ளனர்.